பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 06 ஞாயிற்றுக்கிழமை 20.06.2021 கதிர் 93

போதைப்பொருள் கடத்தல்

## தப்பிய 24 பேருக்கு சிவப்பு அறிவித்தல்

வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ள 24 போதைப் பொருள் கடத்தல்காரர்களைக் கைது செய்வதற்கு சர்வதேச பொலிஸார் ஊடாக சிவப்பு அறிவித்தல்

☞ 2

# கடுமையான கட்டுப்பாடுகளுடன் பயணத் தடை நாளை தளர்வு; மாகாணம் தாண்ட முடியாது; நிகழ்வுகளுக்கு அனுமதி இல்லை





இராணுவத் தளபதி, பொலிஸ் பேச்சாளர் கூட்டாக அறிவிப்பு

நாட்டில் தற்போது அமுலில் உள்ள பயணக் கட்டுப்பாடு நாளை காலை 4 மணிக்கு தற்காலிகமாகத் தளர்த்தப்படவுள்ளது என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண ஆகியோர் தெரிவித்தனர்.

பயணத் தடை தளர்த்தப்படும் காலப்பகுதியில் நகர்ப் பகுதிகளிலும் ஏனைய பகுதிகளிலும் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கும் எனவும், பொலிஸாரின் ரோந்து நடவடிக்கையும் இடம்பெறும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

பயணத் தடை தளர்த்தப்பட்டாலும் சுகாதார நடைமுறைகளையும், வழிகாட்டல்களையும் முழுமையாகப் பின்பற்றுமாறும் பொலிஸ் பேச்சாளர்

☞ 2

# நாட்டை மீளத் திறப்பது பேராபத்து: முழு முடக்கம் தொடர்ந்து வேண்டும்

## ஜனாதிபதிக்கு வைத்திய அதிகாரிகள் சங்கம் அவசர கடிதம்



**நாட்டில் ஆபத்தான 'டெல்ரா' வைரஸ் பரவலுடன் தினசரி 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொற்று நோயாளர்கள் அடையாளம் காணப்படும் இந்த நேரத்தில் எந்த வித திட்டமிடலுமின்றி நாட்டை மீளத்திறப்பது பேராபத்தை ஏற்படுத்தும்.**

**- இவ்வாறு இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் எச்சரித்துள்ளது.**

☞ 2

# 'மொட்டு' கூட்டணிக்குள் மோதலை தவிர்க்க இரு முனை சந்திப்புகள்!

ஆளுங்கட்சியின் முக்கிய இரு கூட்டங்கள் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் பங்குபற்றலுடன் நடைபெறும் இந்தக் கூட்டங்களில் தீர்க்கமான சில முடிவுகள் எடுக்கப்படலாம் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரச கூட்டணிக்குள் ஏற்பட்டிருந்த முறுகல்நிலை எரிபொருட்களின் விலை



உயர்த்தப்பட்ட பின்னர் விடுக்கப்பட்ட அறிக்கை மற்றும் அறிவிப்புகளால் வெளிச்சத்துக்கு வந்தன.

எரிபொருள்களின் விலை உயர்வுக்கான பொறுப்பையேற்று வலுசக்தி அமைச்சர் கம்மன்பில பதவி துறக்கவேண்டும் என 'மொட்டு' கட்சியிலுள்ள பஸிலின் சகாக்கள் வலியுறுத்தி வருகின்றனர். பஸிலின் ஆசியுடன்தான் சாகர காரியவசம் காரசாரமானதொரு அறிக்கையையும் விடுத்திருந்தார் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

இந்த அறிக்கையால் கொதிப்படைந்த கம்மன்பில சாகரவுக்கு பதிலடி கொடுத்தார். பகிரங்க விவாதத்துக்கும் அழைத்தார். கம்மன்பிலவுக்கு ஆதரவாக 'மொட்டு'

☞ 2

## ஏறாவூர் சம்பவத்துக்கு குவியும் கண்டனங்கள்

படையினருக்கு இடமாற்றம்



மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூரில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் இரு இராணுவ அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பயணக் கட்டுப்பாட்டை மீறினர்

☞ 2

## முதியோர் இல்லத்தில் தேரர் அடித்துக்கொலை

பமுனுகம, உஸ்வெட்டகொய்யவா பகுதியில் உள்ள முதியோர் இல்லம் ஒன்றில் தங்கியிருந்த தேரர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த முதியோர் இல்லம் மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்காக ஒதுக்கப்பட்டது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

☞ 2

'டெல்டா' வைரஸ் அடையாளம் காணப்பட்ட

## தெமட்டகொடை சுகாதாரப் பிரிவில் மேலும் 26 பேருக்குக் கொரோனா!

தெமட்டகொடை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த 24 மணிநேரத்துக்குள் மேலும் 26 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா பரவல் தடுப்பு செயற்பாட்டு மையம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு , தெமட்டகொடைப் பகுதியில் அதிக வீரியம் கொண்ட கொரோனா (டெல்டா) திரிவு தொற்றிய ஐவர்

☞ 2

## முல்லைத்தீவில் தொடர் திருட்டு: 4 சிறுவர்கள் வசமாகச் சிக்கினர்

முல்லைத்தீவு - விசுவமடுப் பகுதியில், நீண்ட நாள்களாக, வீடுகளுக்குள் புகுந்து, நீர் இறைக்கும் இயந்திரம் உள்ளிட்ட பெறுமதியான பொருள்களைத் திருடிவந்த கொள்ளையர்கள் நால்வர், கிராம மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு, புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்

சந்தேகநபர்கள், 17,18 வயது

☞ 2

## நாட்டை மீளத் திறப்பது.........................

(முதலாம் பக்க தொடர்ச்சி)

நாட்டை உடனடியாகத் திறப்பதன் மூலம் தொற்று நோய் முன்னேப்போதும் இல்லாதவாறு அதிகரித்து, அதிகளவு இறப்புக்களுக்கு வழிவகுக்கும். அத்துடன், நாட்டின் சுகாதார சேவைத்துறை முற்றிலும் தனது பராமரிப்புத் திறனை இழக்கும் ஆபத்து ஏற்படும் எனவும் அந்தக் கடிதத்தில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஜூன் 19ஆம் திகதியிடப்பட்டு இந்தக் கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:-

மோசமடைந்து வரும் கொரோனாத் தொற்றுநோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மே 21 முதல் நாடு தழுவிய பயணக் கட்டுப்பாட்டை அறிவித்து அரசு எடுத்த முடிவை நாங்கள் பெரிதும் பாராட்டுகின்றோம்.

இந்தக் கட்டுப்பாடுகள் முழுமையாக அமுல் செய்யப்படவில்லை என்றபோதிலும் குறைந்தளவு மக்கள் நடமாட்டம் மற்றும் அலுவலகங்களில் அதிகளவு ஆள்கள் ஒன்றுகூடாமையால் தீவிர தொற்று பரவல், அதிக மரணங்கள் உள்ளிட்ட துன்பங்கள் ஓரளவு கட்டுப் படுத்தப்பட்டதாக நம்புகின்றோம். சுகாதார சேவைத் துறை முழுமையாக செயலிழக்கும் அபாயத்தையும் கட்டுப்பாட்டு நடவடிக்கை மூலம் தடுக்க முடிந்தது.

தொற்றுநோய் நிலையைக் கருத்தில் கொண்டு குறைந்தபட்சம் ஜூன் 28 ஆம் திகதிவரை சமூக முடக்கலை அமுல் படுத்துமாறு ஜூன் 11ஆம் திகதி இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கம் எழுதிய கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

எனினும், ஜூன் 21ஆம் திகதி (நாளை) பயணத் தடை நீக்கப்படும். இதையடுத்து ஜூன் 23ஆம் திகதி இரவு 10 மணி முதல் ஜூன் 25ஆம் திகதி அதிகாலை வரை மீண்டும் அமுல்படுத்தப்பட்டு நீக்கப்படும் என்ற அறிவிப்பை நாங்கள் மிகுந்த அக்கறையுடனும் ஏமாற்றத்துடனும் கவனிக்கின்றோம். என்ன மூலோபாயக் கொள்கை அடிப்படையில் கட்டுப்பாடுகள் நீக்கப்படுகின்றன? என எங்களுக்குத் தெளிவாகத் தெரியவில்லை.

நாட்டில் தற்போது தினசரி 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்படுகின்றனர். ஒவ்வொரு நாளும் 50 மற்றும் அதற்கு மேற்பட்ட கொரோனா மரணங்கள் பதிவாகின்றன.

அத்துடன், தொற்று நோய் நெருக்கடியை மேலும் சிக்கலாக்கக்கூடிய 'டெல்டா' திரிவு வைரஸ் சமூகத்தில் பரவலாக இருப்பதற்கான ஆதாரங்களும் உள்ளன. இந்தத் திரிபு தற்போது ஆதிக்கம் செலுத்தும் ஏனைய வைரஸ்களை விட 50 வீதம் அதிவேகமாகப் பரவக்கூடியது.

இந்நிலையில், ஒரு சில நாள்களுக்குக்கூட கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது ஆபத்தானது. இது மக்களின் கட்டுப்பாடற்ற ஒன்றுகூடலுக்கு வழிவகுக்கும். இதன் மூலம் புதிய ஆபத்தான 'டெல்டா' திரிவு விரைவாகப் பரவி ஆபத்தான வகையில் அதிகரிக்கும் என நாங்கள் கருதுகின்றோம்.

இதன் மூலம் தொற்றுநோய் முன்னேப்போதும் இல்லாதவாறு அதிகரித்து, அதிகளவு இறப்புக்களுக்கு வழிவகுக்கும். அத்துடன், நாட்டின் சுகாதார சேவைத் துறை முற்றிலும் தனது பராமரிப்புத் திறனை இழக்கும் ஆபத்து ஏற்படும்.

கட்டுப்பாடுகளை தளர்த்துவது என முடிவு செய்யப்பட்டாலும் கூட மாவட்ட அளவில் சரியாக தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கட்டம் கட்டமாக, மிகக் கவனமாகவே அதனைச் செய்ய வேண்டும்.

கட்டுப்பாடுகளை படிப்படியாகத் தளர்த்துவதற்கான மூலோபாயக் கொள்கையை உருவாக்கும் பணியில் இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கம் ஈடுபட்டுள்ளது. இந்த வாரத்துக்குள் அந்த மூலோபாயத் திட்டம் இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்படும்.

இந்நிலையில், தற்போதைய முக்கியமான தருணத்தில் சமூக முடக்கல் நடவடிக்கையை நீக்காமல் தொடர்ந்து அமுல் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சில நாள்களுக்கு கூட கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நிலவிய மோசமான நெருக்கடி நிலைமைக்கு மீண்டும் எங்களை இட்டுச் செல்லும். இதன்மூலம் கடந்த மூன்று வாரங்கள் நாட்டில் அமுல்படுத்தப்பட்ட பயணக்கட்டுப்பாட்டால் கிடைத்த நன்மைகளையும் இழக்க நேரிடும்.

நாட்டு மக்களின் ஆரோக்கியத்தைப் பேணும் அனைத்து முயற்சிகளிலும் இந்த நாட்டில் ஜனாதிபதியான உங்களுக்கும் உங்கள் அரசுக்கும் உதவ நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் - என்றுள்ளது.

## கடுமையான கட்டுப்பாடு...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அலுவலகங்களில் பணிபுரிவதற்குக் குறைந்தளவானோரையே சேவைக்கு அழைக்க வேண்டும்.

வீடுகளிலிருந்து இணையம் ஊடாக பணிபுரிவோர் தொடர்ந்தும் அவ்வாறே செயற்படுவதற்கு நிறுவன அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுப்போக்குவரத்தில் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமையவே பயணிகள் ஏற்றப்பட வேண்டும்.

பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும் பயணிகள், முகக்கவசம் அணிந்திருத்தல் கட்டாயமாகும்.

மாகாணங்களுக்கு இடையிலான கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் நீடிக்கும் நிலையில், தகுந்த காரணத்துக்காக மாத்திரம் மாகாணத்துக்குள் பயணிக்க முடியும்.

சுற்றுலாப் பயணங்கள், யாத்திரை செல்லல் மற்றும் கொண்டாட்டங்களுக்குத் தடை.

எதிர்வரும் 23ஆம் திகதி இரவு 10 மணி முதல் மீண்டும் பயணத் தடை அமுலுக்கு வரும். தற் போதைய சூழ்நிலையில் 25ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்படும் - என்றார்.

## 'மொட்டு' கூட்டணி.........

(முதலாம் பக்க தொடர்ச்சி)

கட்சிக்கு ஆதரவு வழங்கும் பங்காளிக் கட்சிகள் அணிதிரண்டன. எனினும், பஸிலின் சகாக்கள் பின் வாங்கவில்லை. கம்மன்பில பதவி துறக்கவேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளனர்.

அத்துடன் எரிபொருள்களின் விலை குறைக்கப்படவேண்டும், மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஆளுங்கட்சி தலைவர்கள் கூட்டம் நாளை நடைபெறவுள்ளது. இதன்போது சமகால அரசியல் நிலைவரங்கள் பற்றியும், எதிர்கால திட்டங்கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடி தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன.

மறுநாள் ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டம் காரசாரமானதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கூட்டணிக்குள் எழுந்துள்ள முரண்பாடுகளுக்கு முடிவு கட்டப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஏறாவூர் சம்பவத்துக்கு...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

என்ற குற்றச் சாட்டுக்காக ஏறாவூர் பகுதியில் மக்கள் சிலரை தரையில் முழந்தாளிட வைத்து இராணுவத்தினர் தண்டனை வழங்கினர்.

இது தொடர்பான படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியானதையடுத்து இந்தச் சம்பவத்துக்கு கடும் கண்டனங்கள் குவிந்து வருகின்றன.

இந்நிலையிலேயே, அதனுடன் தொடர்புபட்ட இராணுவ அதிகாரி ஒருவரும், சிப்பாய் ஒருவரும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவப் பேச்சாளர் கூறியுள்ளார்.

## தெமட்டகொடை...........

(முதலாம் பக்க தொடர்ச்சி)

ஆரம்பத்தில் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

இதேவேளை, கொழும்பு மாவட்டத்தில் கடந்த 24 மணிநேரத்துக்குள் 411 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## தப்பிய 24 பேருக்கு......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

வெளியிடப்பட்டுள்ளது.

சிவப்பு அறிவித்தலுக்கு அமைய, போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல், திட்டமிட்டு குற்றச்செயல்களில் ஈடுபடும் 13 பேர் தொடர்பிலேயே தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களில் இருவர் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளதுடன், மேலும் 11 பேர் வெளிநாடுகளில் தலைமறைவாகியுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய ஏனைய சிலருடன் மொத்தமாக 24 பேர் வெளிநாடுகளில் தலைமறைவாகியுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முதியோர் இல்லத்தில்.....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

மனநலம் பாதிக்கப்பட்டு அங்கு தங்கிருந்த 73 வயதுடைய ஜா - எல பகுதியைச் சேர்ந்த தேரர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று விசாரணை மேற்கொண்டு வரும் பமுனுகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## முல்லைத்தீவில்.......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

களையுடையவர்கள் எனவும், இவர்கள் விசுவமடு - குமாரசாமிபுரம், வள்ளுவர்புரம், மாணிக்கபுரம், இளங்கோபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவர்கள் நால்வரும், விசுவமடு மேற்குப் பகுதியில் உள்ள வீடொன்றில், நேற்று அதிகாலை, திருட முற்பட்ட போதே, கிராம மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சிறுவர்கள், மேலும் பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

**நாளைய தினம்**
**காலைக்கதிர்**
**காலை இதழில்**
**தரம் - 07இற்கான**
**கணித பாட பயிற்சி**
**வினாத்தாள்**
**இணைக்கப்பட்டுள்ளது.**



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## முறையற்ற அரசியல் ஆதாயம்

படித்த, கற்றறிந்த மக்கள் என்று யாழ்ப்பாணத்தவருக்குப் பெயருண்டு.

ஆனால் அவர்களை முட்டாள்களாக்கி, அரசியல் ஆதாயத்தில் ஆட்டைையைப் போடும் அநாகரிகத்தை அரசியல் பிரகிருதிகள் சிலர் இங்கு தொடர்ந்து முன்னெடுப்பது யாழ்ப்பாணக் கற்றறிந்த சமூகத்துக்கு அவமானம்.

கொரோனாப் பேரிடர் என்பது நமது மக்களைப் பாதித்த பெரும் துயரம். அந்த நலிவில் சிக்கியிருக்கும் மக்களுக்கு பொதுத் தரப்பினர் வழங்கும் உதவிகளை, தமது போலக் காட்டி அரசியல் ஆதாயம் தேடும் – பெயரை ஆட்டையைப்போடும் – அராஜகம் தொடர்வதாகக் குற்றம் சுமத்தப்படுகிறது.

கற்றறிந்தவர்களை அதிகம் கொண்ட யாழ்ப்பாணச் சமூகத்தில் இப்படி மாற்றாரின் உழைப்பை – உதவியை – தம்முடையதாகக் காட்டி ஆட்டையைப் போடும் அரசியல் செய்வது யாழ்ப்பாண மக்களுக்கான அவமானம் மட்டுமல்ல, அதனைச் செய்யும் அரசியல்வாதிகளுக்கும் அதற்குத் தோன்றாய்த் துணையாய் நிற்கும் அரச அதிகாரிகளுக்கும் கூட அவமானம்தான்.

இப்போது பதவியிலிருக்கும் மூத்த அரச அதிகாரிகளுக்கு ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட விழைகிறோம்.

அத்தகைய அரசியல்வாதிகளின் இதுபோன்ற முறையற்ற வகையில் ஆட்டையைப் போடும் செயல்களுக்கும் துணை போவதன்மூலம் இப்போதைய நிலையில் நீங்கள் உங்கள் பதவியைத் தக்க வைக்கலாம். பதவி உயர்வு பெறலாம். நீங்கள் விரும்பும் பொறுப்புக்களை எட்டலாம். அல்லது இப்போது இருக்கும் பதவியை சர்ச்சையின்றித் தொடரலாம்.

நீங்கள் எப்படியும் இருந்துவிட்டுப் போங்கள். ஆனால் இத்தகைய தவறுகளுக்கு தெரிந்தோ தெரியாமலேயோ, விரும்பியோ விரும்பாமலேயோ நீங்கள் துணைபோய் உங்கள் பிரச்சினையைச் சமாளித்துக் கொண்டாலும் –

மற்றையோரின் உழைப்பை, உதவியை ஆட்டையைப்போட்டு தன்னுடையதாகக்காட்டும்அரசியல்வாதியின்நயவஞ்சகத்தனத்துக்கு நீங்கள் துணைபோய் இன்று உங்கள் நிலைமையை காப்பாற்றிக் கொண்டாலும் –

அது தொடர்பாக நடக்கின்ற – இனி நடக்கப்போகின்ற – விசாரணைகளிலிருந்தும் கூட நீங்கள் தப்பிப் பிழைத்தாலும் –

நீங்கள் அரச சேவையில் இருந்து ஒய்வு பெற்ற பின்னரும் கூட, ஆட்டையைப் போடுவதற்கு அரசியல்வாதிகளுக்கு நேரடியாக உதவிய அரச அதிகாரி நீங்கள்தான் என்ற ‘லேபிள்’ உங்கள் பெயருடன் நிரந்தரமாக ஒட்டிக்கொண்டு உங்கள் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் என்பதை மறந்து விடாதீர்கள்.

ஏற்கனவே, பொதுத் தேர்தல் சமயத்தில் இது நடந்தது. அந்த விசாரணை இன்னும் தொடர்கின்றது.

அதற்கிடையில், இப்போது யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மற்றும் யாழ். வர்த்தக சங்கம் ஆகியன வழங்கிய நிவாரணப் பொதிகளும். கூட பல பிரதேச செயலகப் பிரிவுகளின் இப்படி ஓர் அரசியல்வாதியின் பரிந்துரைப் பட்டியலுக்கமைய அல்லது அந்த அரசியல்வாதி ஊடாக வழங்கப்படும் நிவாரணம் என்ற மாதிரிக். காட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன எனக் குற்றம் சுமத்தப்படுகிறது.

நிவாரணப் பொதிகளைப் பெற்றவர்களுக்கு தொலைபேசி அழைப்பெடுத்து, நாங்கள் தான் உங்களுக்கு நிவாரணம் வழங்கச் சொன்னோம் என்று மேற்படி ஆட்டையைப்போடும் அரசியல்வாதிகளின் ஆள்கள் தெரிவிக்கின்றனர் என்றும் தகவல்.

பல இடங்களில் இத்தகைய அத்துமீறல் செயற்பாட்டுக்கும் பல அரச அதிகாரிகள் இடம் கொடுக்காமல் உறுதியாக நின்றபோதும், இந்த ‘கோமாளித்தனம்’ பல இடங்களில் இப்படி நீடிப்பது யாழ். சமூகத்துக்கு அவமானம் இன்றி வேறில்லை.

ஜி.சீ.ஈ. உயர்தரம் சித்தியடையாத ஒரு லட்சம் பேருக்கு வேலை வழங்குவதற்கான விடயத்திலும் அந்த அரசியல் சாதனையை – அரசியல் ஆதாயத்தை – இப்படி ஆட்டையைப் போடும் இதே பிரகிருதி அரசியல்வாதி கடந்த பொதுத்தேர்தலின்போது சுருட்டிக்கொண்டார். அந்த கோபத்தில்தான் வடக்கிற்கான இந்த நியமனங்களை ஜனாதிபதி செயலகத் தரப்பு முற்றாகத் துண்டித்துக் கைவிட்டது என்றும் ஒரு தகவல் உள்ளது.

அரசு மக்களுக்குச் செய்யவேண்டிய கடப்பாடுடைய திட்டங்கள், நடவடிக்கைகளையும் தனது தனிப்பட்ட அரசியல் செல்வாக்கால் செய்யப்படுவன போலக் காட்டி அதில் முறையற்ற அரசியல் ஆதாயத்தை அந்த அரசியல்வாதி ஈட்டிக்கொள்கின்றார் என்றால் – அரசியல் ஆதாய விடயத்தில் ஆட்டையைப் போடுகின்றார் என்றால் – அதற்கு அவருக்கிருக்கும் ஒரே மூலதனம் கற்றறிந்த நமது சமூகத்தின் அறிவிலித்தனம் அல்லது முட்டாள்த்தனம் தான் என்பது மறுக்க முடியாத உண்மை.

எப்போது திருந்தப்போகின்றது யாழ்ப்பாணம்? ஆட்டையைப் போடும் சிறுமைத்தனத்துக்கு நமது சமூகம் எடுபட்டு, இன்னொரு தடவையும் முட்டாள்தனமாகத் திரண்டு வாக்களிக்கும் என்பது அந்த அரசியல்வாதியின் அசையாத நம்பிக்கை. அதனால் தான் அரசியல் ஆதாயத்தை குறுக்கு வழியில் ஆட்டையைப் போடும் இந்த முயற்சி தளராமல் தொடர்கிறது.

# மீனவர்கள் பிரச்சினையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை

## மன்னார் மாவட்ட மீனவ அமைப்புக்களின் பிரதி நிதிகள் குற்றச்சாட்டு



மன்னார் மாவட்ட மீனவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்த போதும் மீனவர்களின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய அரசாங்கம் இது வரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என மன்னார் மாவட்ட மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மன்னார் மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவையின் ஏற்பாட்டில் மாவட்ட இணைப்பாளர் ஏ.பெனடிற் குரூஸ் தலைமையில் நேற்று (சனிக்கிழமை) காலை மன்னாரில் உள்ள அலுவலகத்தில் ஊடக சந்திப்பு இடம் பெற்றது.

குறித்த ஊடக சந்திப்பில் மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சமாச செயலாளர் என்.எம். ஆலம், வடமாகாண கடற்தொழிலாளர் இணையத்தின் செயலாளர் அன்ரனி சங்கர், மன்னார் மாவட்ட மீனவ சங்கங்களின் சமாச தலைவர் மரியதாஸ் குரூஸ் ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கலந்து கொண்டு மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த மாதம் இறுதி பகுதியில் கொழும்பு கடற்பரப்பில் தீப்பிடித்த நிலையில் மூழ்கடிக்கப்பட்ட கப்பலில் இருந்து வெளியாகும் இரசாயனக் கழிவுகளால் கடல்வாழ் உயிரினங்களுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தி இதன் மூலம் இலங்கையின் அனைத்து மீனவர்களும் பாதிக் கப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். இந்த இரசாயனக் கழிவுகளால் கடலாமைகள், திமிங்கலம் போன்றவை வங்காலை,முள்ளிக்குளம், தாழ்வுபாடு போன்ற பகுதிகளில் உயிரிழந்து கரையொதுங்கிக் கொண்டிருக்கின்றன.

இன்னும் எவ்வளவு காலத்திற்கு எமது கடல் வளங்கள் பாதிக்கப் போகின்றன. இதனால் மீனவர்களின் நிலை என்ன என்பதை பற்றிச் சிந்திக்காமல் இந்த அரசாங்கம் மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்றது. அத்துடன் இந்தப் பய ணத்தடை மூலம் பாதிப்பிற்கு உள்ளான மக்களைப் பாதுகாப்பதற்கு அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எரிபொருள் விலை ஏற்றத்தால் சிறு மீனவர்களும் அனைத்து மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த நிலையில் மேலும் பல அத்தியாவசியப் பொருள்களின் விலையை அதிகரிப்பதற்கு ஆலோசனை நடந்து வருவதாகவும் அறிகின்றோம்.

இந்த விலையேற்றத்தின் ஊடாக அனைத்து மக்களையும் தற்கொலைக்கு தள்ளக்கூடிய சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. மேலும் கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட புயல் காரணமாக பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இன்னும் நிவாரணங்கள் வழங்கப்படவில்லை.

மீனவர்கள் செய்த சொந்த காப்புறுதிகளுக்குக் கூட இன்னும் இழப்பீடுகள் வழங்கப்படவில்லை எனக் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதன் போது மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சமாச செயலாளர் என்.எம்.ஆலம், வடமாகாண கடற்தொழிலாளர் இணையத்தின் செயலாளர் அன்ரனி சங்கர், மன்னார் மாவட்ட மீனவ சங்கங்களின் சமாச தலைவர் மரியதாஸ் குரூஸ் ராஜா ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்களைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.



## பத்மநாபாவின் 31ஆவது நினைவுதினம் அனுஷ்டிப்பு

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் க.பத்மநாபாவின் 31 ஆவது நினைவுதினம் நேற்று சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியாவில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில்நடைபெற்ற இந்நிகழ்வில் பத்மநாபாவின் திருவுருவப் படத்திற்கு ஒளிதீபம் ஏற்றி மரணித்த ஏனைய தோழர்களையும் நினைவு கூர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முக்கியஸ்தர் கே.அருந்தவராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன், வவுனியா நகரசபை தலைவர் இ.கௌதமன், கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கிபிர் விமானக்குண்டு முல்லையில் மீட்கப்பட்டன

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆனந்தபுரம் 5 ஆம் வட்டாரத்தில் தனியார் காணி ஒன்றில் அபாயகரமான வெடிபொருள்கள் இருக்கின்றமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த காணியின் உரிமையாளர் அப்பகுதியை விவசாய நடவடிக்கைக்காகத் துப்புரவு செய்த போதே வெடிபொருள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

5 அங்குல எறிகணை ஒன்றும் கிபிர் விமானக் குண்டு ஒன்றும் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், மேலும் வெடிபொருள்கள் அந்த காணியில் புதைந்திருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் குறித்த வெடி பொருள்களை அங்கிருந்து மீட்பதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.





# ஈரான் அதிபர் தேர்தலில் இப்ராகிம் ரைசி வெற்றி

ஈரான் அதிபர் ஹசன் ரூஹானியின் பதவிக் காலம் முடிவடைந்ததை அடுத்து, புதிய அதிபரை தேர்வு செய்வதற்கான தேர்தல் நேற்று முந்தினம் நடந்தது.

உள்ளூர் நேரப்படி காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு நள்ளிரவு 2 மணி வரை தொடர்ந்தது. எனினும் அதிபர் தேர்தலில் மக்கள் மிகுந்த ஆர்வம் காட்டவில்லை என்றும் இதனால் குறைவான வாக்குகளே பதிவாகின என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2017ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 70 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் பதிவான நிலையில், இம்முறை 60 சதவீதத்துக்கும் குறைவாகவே வாக்குகள் பதிவாகின என கூறப்படுகிறது.

அதிபர்பதவிக்கு உயர்நீதிமன்றில் தலைமை நீதிபதி இப்ராகிம் ரைசி, ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் அப்தூல் நாசர் ஹெம்மாட்டி, முன்னாள் இராணுவத் தளபதி முகசன் ரஜாய் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அமீர் உசேன் காஜிஜடேஹசேமி ஆகிய 4 பேர் போட்டியிட்டனர்.

இந்நிலையில், வாக்குப்பதிவு முடிவடைந்ததும் உடனடியாக வாக்குகளை எண்ணும் பணிகள் தொடங்கின. இதில் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி இப்ராகிம் ரைசி சக வேட்பாளர்கள் 3 பேரையும் பின்னுக்கு தள்ளிவிட்டு வெற்றி பெற்றார். தேர்தல் முடிவுகள் குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகாத போதும், இப்ராகிம் ரைசி வெற்றி பெற்றார் என அந்த நாட்டு ஊட கங்கள் செய்தி வெளியிட்டன.

அதிபர் வேட்பாளர்களாகபோட்டியிட்ட அப்தூல் நாசர் ஹெம்மாட்டி மற்றும் முகசன் ரஜாய் ஆகியோர் தங்களது தோல்வியை ஒப்புக் கொண்டதோடு, இப்ராகிம் ரைசிக்கு தங்களின் வாழ்த்துகளையும் தெரிவித்தனர்.


# அமெரிக்க மாணவி ரஷ்யாவில் மரணம்

ரஷ்யாவில்நிஜ்னிநவ்கரோடுபகுதியில்உள்ளலோபசெவ்ஸ்கை பல்கலைக்கழகத்தில் படித்து வந்தவர் கேத்தரீன் செரவ் (வயது 34). அமெரிக்காவைச் சேர்ந்தவரான செரவ் கடந்த செவ்வாய்க் கிழமை காணாமல் போயுள்ளார்.

இதுபற்றி கடந்த வியாழக்கிழமை பொலிஸார் விசாரணையை தொடங்கினர். அதில், அறிமுகம் இல்லாத நபருடன் காரில் செல்லும்போது கடைசியாக தனது தாயாருக்கு செய்தி அனுப்பியுள்ளார். நான் கடத்தப்படவில்லை என நம்புகிறேன் என்று அதில் தெரிவித்து உள்ளார்.

எனினும், மருத்துவமனைக்கு செல்வதற்கு பதிலாக கார் காட்டுக்குள் சென்றுள்ளது என கூறப்படுகிறது. காட்டில் உள்ள டவரில், செரவின் செல்போன் அழைப்பு சென்றது பதிவாகி உள்ளது. இதுபற்றி 40 வயதுடைய நபர் ஒருவரை விசாரணை குழு கைது செய்து விசாரணை நடத்தி வருகிறது.

நாங்கள் நிலைமையை உன்னிப்புடன் கண்காணித்து வருகிறோம் என அமெரிக்க தூதரகம் தெரிவித்து உள்ளது. கைது செய்யப்பட்ட நபர் கடந்த காலங்களில் குற்றவாளி என அறிவிக்கப்பட்டவர் ஆவார்.



# 150 நாளில் 30 கோடி கொரோனாத் தடுப்பூசி செலுத்தி உள்ளோம்; அதிபர் ஜோ பைடன்

அமெரிக்க அதிபராக ஜோ-பைடன் பொறுப்பேற்றுக் கொண்ட பின், கொரோனா-தடுப்பூசி பணிகளில் தீவிர கவனம் செலுத்தினார். வரும் ஜுலை 4ஆம் திகதிக்குள் அமெரிக்காவில் வயது வந்தோரில் 70 சதவீதத்தினர் குறைந்தது ஒரு டோஸ் தடுப்பூசியாவது பெற்று விட வேண்டும் என இலக்கு நிர்ணயித்து அதற்கான பணிகள் நடந்தன.



இந்நிலையில், அமெரிக்க அதிபர் ஜோ-பைடன் வெளியிட்டுள்ள அறிவிப்பில், அமெரிக்காவில் 150 நாள்களில் 30 கோடி கொரோனாத் தடுப்பூசி டோஸ்கள் செலுத்தப்பட்டுள்ளன. ஆனால், நான் ஆட்சி பொறுப்பேற்றபோது நமது நாடு நெருக்கடியான காலகட்டத்தில் இருந்தது.

150 நாள்களுக்கு முன் அமெரிக்காவில் நிலைமை எப்படி இருந்தது என நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். அமெரிக்கர்கள் அனைவருக்கும் போதிய தடுப்பூசி வினியோகம் என்பது நம்மிடம் இல்லை.

ஆனால், நாம் ஒன்றிணைந்து செயல்பட்டு அதனை மாற்றியுள்ளோம் என தெரிவித்துள்ளார்.

மேலும், கொரோனா வைரஸ் 'டெல்டா பிளஸ்' ஆக தொடர்ந்து உருமாறி வருகிறது. அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள பொதுமக்கள் அனைவரும் கொரோனாத் தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# வளர்ப்பு நாய் மறைவு ஜோ பைடன் உருக்கம்



அமெரிக்க அதிபராக பொறுப்பேற்ற ஜோ பைடன் தனது வளர்ப்பு பிராணிகளுடன் கடந்த ஜனவரி மாதம் வெள்ளை மாளிகையில் குடியேறினார்.

பைடன் 2008ஆம் ஆண்டு ஜேர்மன் ஷெப்பர்டு வகையைச் சேர்ந்த சாம்ப் என்ற நாயையும், 2018-ஆம் ஆண்டு அதே வகையைச் சேர்ந்த மேஜர் என்ற நாயையும் தத்தெடுத்து வளர்த்து வருகிறார்.

இந்நிலையில், அதிபர் ஜோ பைடனின் வளர்ப்பு நாய்களில் ஒன்றான சாம்ப் இன்று இறந்தது.

**அதிபர் ஜோ பைடன்**

சாம்ப் மறைவு குறித்து அதிபர் ஜோ பைடன் மற்றும் ஜில் பைடன் வெளியிட்டுள்ள அறிவிப்பில், 13 ஆண்டு காலம் எங்கள் குடும்பத்தின் உற்ற நண்பனாக விளங்கிய சாம்பை இழந்து வாடுகிறோம் என தெரிவித்துள்ளனர். சாம்ப் இனிமையானவன் மட்டுமல்ல, நல்ல பையனும் கூட என அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

## ஆங் சான் சூகி பிறந்தநாள்

# தலையில் பூக்களை அணிந்து ஆதரவு தெரிவித்த மக்கள்



மியன்மாரில் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கடந்த பெப்ரவரி மாதம் 1ஆந் திகதி இராணுவம் கவிழ்த்துவிட்டு ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது. மேலும் நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி, அதிபர் வின் மைன்ட் உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்களை கைது செய்து வீட்டுக் காவலில் வைத்துள்ளது. இராணுவ ஆட்சிக்கு எதிராகவும், ஆங் சான் சூகிக்கு ஆதரவாகவும் பொதுமக்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். போராட்டத்தை இராணுவம் கொடூரமாக அடக்கி வருகிறது. இதில், சுமார் 870 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆங் சான் சூகி மீது, தேசத்துரோகம், ஊழல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அடுத்த வாரம் மீண்டும் விசாரணை தொடங்க உள்ளது.

இந்நிலையில், வீட்டுக்காவலில் உள்ள ஆங் சான் சூகிக்கு இன்று 76வது பிறந்தநாள். அவரது பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் இன்று மியன்மார் முழுவதும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் தலைமுடியில் பூக்களை அணிந்திருந்தனர். கேக் வெட்டி, அவரை வாழ்த்தி கோஷங்களை எழுப்பினர். தலை முடியில் பூக்களை அணிந்திருப்பது ஆங் சாங் சூகியின் அடையாளமாக உள்ளது. எனவே, இன்றைய போராட்டத்தின்போது பலரும் பூக்களை அணிந்திருந்தனர். பலர், விதவிதமான பூக்களை தலையில் அலங்கரித்து, படங்கள் எடுத்து சமூக வலைத் தளங்களில் பதிவிட்டனர். ஆங் சாங் சூகியின் போஸ்டர்கள் முன்பு மலர்கொத்துக்களை வைத்தும் வாழ்த்துத் தெரிவித்தனர்.

மியன்மார் மிஸ் யுனிவர்ஸ் அழகு ராணியான துசார் வின்ட் எல்வின், தனது தலைமுடியில் சிவப்பு நிற பூக்களை அணிந்து, அதனை படம் எடுத்து வலைத்தளத்தில் பதிவேற்றி உள்ளார். 'எங்கள் தலைவர் ஆரோக்கியமாக இருக்கட்டும்' என்ற கருத்தையும் அவர் பதிவிட்டிருந்தார்.

தென்கிழக்கு பகுதியில் உள்ள டேவி நகரில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பெரிய அளவில் இளஞ்சிவப்பு நிற பிறந்தநாள் கேக்கை தயாரித்து, அதை போராட்டம் நடைபெறும் வீதிக்கு கொண்டு வந்தனர்.

# இலங்கைத் தமிழர்களை விடுதலை செய்யுங்கள்

## ஆஸ்திரேலியாவில் மாணவர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்




திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் குற்ற வழக்குகளில் தொடர்புடையதாக தமிழ்நாட்டுக் காவல்துறையால் கைதுசெய்யப்பட்ட இலங்கைத் தமிழர்கள் 78 பேர் உள்ளனர்.

இவர்கள், தங்களைப் பொய் வழக்கில் கைது செய்து, அந்த வழக்கிலும் தண்டனைக் காலத்திற்கு மேலாகவும் சிறப்பு முகாம் எனும் சிறையில் அடைத்து வைத்துள்ளனர் எனவும், எனவே, சட்டப்படி தங்களை விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி பல்வேறு கட்டப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இவர்களது கோரிக்கை நிறைவேற்றப்படாததனால், தங்களை விடுவிக்கக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தை கடந்த 9 ஆம் திகதி இவர்கள் ஆரம்பித்தனர். தங்களை விடுவிக்க வேண்டும், அல்லது கருணைக் கொலை செய்யமேண்டுமென தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு இவர்கள் கோரிக்கை விடுத்தனர். அன்று மாலை காவல்துறையினர் மற்றும் வருவாய்த் துறையினரின் பேச்சினை அடுத்து உண்ணாவிர தத்தைக் கைவிட்டு காத்திருப்புப் போராட்டமாக அத னைத் தொடர்கின்றனர். இவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், சிறப்பு முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்களை விடுதலை செய்யக்கோரி ஆஸ்திரேலியாவின் மெல் போர்ன் நகரில் தமிழ் மாணவர்களும் ஆஸ்திரேலியமாணவர்களும் இணைந்து கவனயீர்ப்புப் போராட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

# இந்தியாவில் கடந்த 24 மணித்தியாலத்தில் 58, 419 பேருக்கு மட்டுமே கொரோனாத் தொற்று



இந்தியாவில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின் பாதிப்பு தொடர்ந்து சரிந்து கொண்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தினமும் ஒரு லட்சத்துக்கும் குறைவாகவே தொற்றுப் பாதிப்புப் பதிவாகி வருகிறது. நேற்று 60 ஆயிரத்து 753 பேருக்கு மட்டுமே புதிதாக கொரோனா பாதிப்பு பது உறுதியானது. இந்த நிலையில், இந்தியாவில் 81 நாள்களுக்குப் பிறகு தினசரி கொரோனா பாதிப்பு 60 ஆயிரத்திற்கு கீழாகக் குறைந்திருப்பதை தரவுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

இது தொடர்பாக இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் 'இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 58 ஆயிரத்து 419 பேர் கொரோனா பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். இதனால், மொத்த கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 2 கோடியே 98 லட்சத்து 81 ஆயிரத்து 965 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாப் பாதிப்பால் ஒரேநாளில் மேலும் 1,576 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 3,86,713 ஆக உயர்ந்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் 87 ஆயிரத்து 619 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதனால் மொத்தமாகக் குணமடைந்தோர் எண்ணிக்கை 2 கோடியே 87 லட்சத்து 66 ஆயிரத்து 009 ஆக உயர்வடைந்துள்ளது. இதனை வைத்துக் கணிப்பிட்டால் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தோர் 95.26 சதவீதமாக உள்ளனர்.

கொரோனாப் பாதிப்புக் காரணமாக தற்போது 7,29,243 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இந்தியாவில் இதுவரை செலுத்தப்பட்ட கொரோனாத் தடுப்பூசிகளின் எண்ணிக்கை 27 கோடியே 66 லட்சத்து 93 ஆயிரத்து 572 ஆக உள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நீட் தேர்வு தொடர்பான பாதிப்புகளை முறையிடுக!

## நடிகர் சூர்யா கோரிக்கை

நீட் தேர்வு தொடர்பாகவும், அதனால் ஏற்பட்டிருக்கும் பாதிப்புகள் குறித்தும் ஆய்வு செய்வதற்காக தமிழக அரசு, நீதியரசர் ஏ.கே. ராஜன் தலைமையில் குழு ஒன்றை அமைத்திருக்கிறது. பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க neetimpact2021gmail.com என்ற தொடர்பு மின்னஞ்சலையும் வழங்கியுள்ளது.

நீட் தேர்வுக்கு தன்னுடைய எதிர்ப்பினை பகிரங்கமாகவே வெளியிட்டுவரும் நடிகர் சூர்யா தற்போது இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். அதில், 'நீட் தேர்வால் ஏற்படும் பாதிப்புகளை தமிழ்நாடு அரசு அமைத்துள்ள நீதிபதி ஏ.கே.ராஜன் குழுவிடம் முறையிடுக' என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், 'அரசுப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு கல்வியே ஆயுதம். இங்கு ஏழைகளுக்கு ஒருவிதமான கல்வி வாய்ப்பும், பணம் படைத்தவர்களுக்கு ஒருவிதமான கல்வி வாய்ப்பும் இருக்கிறது. இருவேறு கல்வி வாய்ப்பு இருக்கிற சூழலில் தகுதியைத் தீர்மானிக்க ஒரே தேர்வுமுறை என்பது சமூக நீதிக்கு எதிரானது' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மம்தா பானர்ஜியின் பா.ஜ.கவுக்கு எதிரான வழக்கில்

# பா.ஜ.க. சார்பான நீதிபதியா? அதிருப்திக் கடிதம் அனுப்பப்பட்டது

அண்மையில் நடந்து முடிந்த மேற்கு வங்காள மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் கட்சி ஆட்சியைத் தக்க வைத்துக்கொண்டது. எனினும், நந்திகிராம் தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளரான சுவேந்து அதிகாரியிடம் மம்தா பானர்ஜி தோல்வி அடைந்தார்.

சுவேந்து அதிகாரியின் வெற்றியை எதிர்த்து கொல்கத்தா உயர் நீதிமன்றில் மம்தா பானர்ஜி மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில், நந்திகிராம் தொகுதியில் பணப்பட்டுவாடா, லஞ்சம் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொண்டே சுவேந்து அதிகாரி வெற்றி பெற்றிருக்கிறார். அதுமட்டுமன்றி, நந்திகிராம் தொகுதியில் வாக்கு எண்ணிக்கையின்போதும் முறைகேடுகள் நடந்துள்ளன. எனவே, சுவேந்து அதிகாரி வெற்றிபெற்றது செல்லாது என அறிவிக்க வேண்டும்" என மம்தா பானர்ஜி கோரியுள்ளார்.

இந்த மனு மீதான விசாரணை கொல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதி கவுசிக் சந்தா முன்பு வந்தது. அப்போது, 'இது தேர்தல் தொடர்பான மனு என்பதால் முதல் நாள் விசாரணையில் மம்தா பானர்ஜி நேரில் ஆஜராக வேண்டியிருக்கும்" என நீதிபதி கூறினார். இதனை மம்தாவின் வழக்கறிஞர் ஏற்றுக்கொண்டார். இதையடுத்து, இந்த வழக்கை வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டார். தவிர, தோல்வியுற்ற மேலும் 4 திரிணாமுல் காங்கிரஸ் வேட்பாளர்கள் தொடர்ந்த வழக்கும் 24 ஆம் திகதி விசாரணைக்கு வருகிறது. இந்த நிலையில் மேற்கு வங்காள பா.ஜ.க. தலைவர் திலீப் கோஷுடன் நீதிபதி கவுசிக் சந்தா ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட இரண்டு படங்களை திரிணாமுல் காங்கிரஸ் வெளியிட்டு இருந்தது. அதில், 'நீதிபதி கவுசிக் சந்தா பா.ஜ.க. தலைவருடன் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டுள்ளார். ஆச்சரியப்படத்தக்க வகையில், அவர் நந்திகிராம் வழக்கை விசாரிக்க நியமிக்கப்பட்ட நீதிபதியும் ஆவார். இந்திய நீதித்துறை அமைப்பு நாளுக்கு நாள் இருண்டு வருதால் இந்த வழக்கில் நீதி கிடைக்குமா? என காலம்தான் பதில் சொல்லும்' என குறிப்பிடப்பட்டு இருந்தது.

இது தொடர்பாக மம்தா பானர்ஜியின் ஆலோசகர் சஞ்சய் பாசு, தலைமை நீதிபதி ராஜேஷ் பிண்டலுக்கு எழுதிய கடிதத்தில், நீதிபதி கவுசிக் சந்தா பா.ஜ.கவின் தீவிர உறுப்பினராக இருந்தார் என்பது எனது கட்சிகாரருக்கு தெரியவந்துள்ளது. ஆகவே, நீதிபதி தேர்தல் மனுவை எடுத்துக் கொண்டால், பதிலளித்தவருக்கு ஆதரவாக, அல்லது எனது கட்சிக்காரருக்கு எதிராக நீதிபதியின் முடிவு இருக்கலாம் என்று குறிப்பிட்டு தங்களது ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளார்.



மேற்கு வங்காள பா.ஜ.க. தலைவர் திலீப் கோஷிடம், நீதிபதி சாந்தா பா.ஜ.க உறுப்பினரா? என்று ஊடகங்கள் கேள்வியெழுப்பியபோது, அவர், நிச்சயமாக இல்லை என்று மறுத்திருக்கிறார். ஆயினும், அவர் ஒரு நீதிபதியாக வருவதற்கு முன்பு, கட்சியின் சட்ட செயல் திட்டங்களில் கலந்து கொண்டார் எனவும், கட்சிக்காக உயர்நீதிமன்றில் ஆஜராகியிருக்கலாம் என்றும் கோஷ் ஒப்புக்கொண்டார். வெளிவந்துள்ள படங்கள் அநேகமாக 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் எடுக்கப்பட்டவையாக இருக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளதோடு, அதில் என்ன தவறு இருக்கிறது? என்று கேள்வி எழுப்பியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியா தள வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் உள்ளீர்க்க!

## மஹ்றூப் கோரிக்கை

கிண்ணியா தள வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் உள்ளீர்க்க தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு திருகோணமலை மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்றூப் சுகாதார, போக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக சுகாதார அமைச்சருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிண்ணியா தள வைத்தியசாலை தற்போது கிழக்கு மாகாண சபையின் பராமரிப்பின் கீழ் உள்ளது. இவ்வைத்தியசாலையை கிண்ணியா பிரதேச மக்கள் மட்டுமன்றி தம்பலகமம், சீனக்குடா மற்றும் மூதூரின் இறால்குழி கிராம மக்களுமாக சுமார் 125,000 பேர் பயன்படுத்தி வருகின்றனர்.

இதற்கு மேலதிகமாக சீனக்குடா பொலிஸ் மற்றும் விமானப் படையினருக்கும், இப்பகுதியிலுள்ள ஏனைய படையினருக்கும் இவ்வைத்தியசாலை பயன்படுகின்றது.

இந்த மக்களினதும், படையினரதும் தேவைகளை முழுமையாக நிறைவு செய்யும் அளவுக்கு இந்த வைத்தியசாலையில் உள்ள வளங்கள் போதுமானதாக இல்லை. இந்தத் தேவைகளை முழுமையாக நிறைவு செய்து கொடுக்கும் வாய்ப்பும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு இல்லை.

இதனால் கடந்த காலங்களில் மத்திய அரசின் நிதி ஒதுக்கீடுகள் மூலமே இவ்வைத்தியசாலையின் சில தேவைகள் ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இவ்வைத்தியசாலையில் பல்வேறு பற்றாக்குறைகள் இருப்பதால் அரசின் இலவச சுகாதார சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் இம்மக்கள் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

எனவே, இந்த விடயங்களை கவனத்தில் கொண்டு கிண்ணியா தள வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் உள்ளீர்க்க தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என அவ்வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# இயந்திரம் மூலம் உழுந்து அறுவடை

## அதிக விளைச்சல் – அதிக இலாபம்

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் சாகாமம் பிரதேசத்தில் உழுந்து செய்கை மேற்கொண்ட விவசாயி ஒருவர் நேற்று முதல் முறையாக அறுவடை இயந்திரம் மூலம் அறுவடை மேற்கொண்டதுடன் சிறந்த விளைச்சலையும் பெற்றுக் கொண்டார்.

கோடை காலத்தில் மேற் கொள்ளும் உழுந்து செய்கையில் மஞ்சள் நிறதாக்கம் அதிகரித்து காணப்படும் எனவும் கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொண்டதால் தாக்கம் ஏற்படவில்லை எனவும் கூறிய அவர் 3 ஏக்கரில் உழுந்து பயிர்ச்செய்கையை மேற் கொண்டதாகவும் அதற்கான அறுவடை இயந்திரம் மூலம் மேற்கொள்ளப்பட்டதாகவும் குறிப்பிட் டார்.

இதேநேரம் அறுவடை உள்ளிட்ட செலவுடன் 3 ஏக்கருக்குமான செலவு சுமார் ஒரு லட்சம் ரூபா மொத்தமாக ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விவசாயம் செய்ய இயலாத மேட்டு நிலத்தில் செய்யக்கூடிய வறட்சி நில பயிர்தான் உழுந்து எனவும் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யாமல் நமது நாட்டிலே பயிர் செய்து தன்னிறைவு காணவேண்டும் என்பதே எனது இலக்கு எனவும் தெரிவித்தார். அத்தோடு எதிர் காலத்தில் தானும் இதனை விஸ்தரிக்க அரசாங்கத்தின் உதவியினையும் கடன் உதவியினையும் எதிர்பார்க்கிறேன் எனவும் தெரிவித்தார்.

இந்நிலையில் அறுவடை செய்யும் ஒரு கிலோ கறுப்பு உழுந்தை 600 ரூபா தொடக்கம் 700 வரை விற்கமுடியும் எனவும் தீட்டிய உழுந்தை ஒரு கிலோ 1,400 ரூபாவுக்கு விற்க முடியும் எனவும் கூறினார்.

தற்போதைய அறுவடையின் நிறைவில் சுமார் 1,000 கிலோ உழுந்து கிடைத்துள்ளதாகவும் இதன் மூலம் இலாபத்தை அடைந்துள்ளேன் எனவும் தெரிவித்தார்.

ஆயினும் கடந்த வருடம் அறுவடை மனிதவலுவினால் மேற்கொண்டதால் அதிக இலாபம் பெற முடியாமல் போனதாகவும் தம்பிலுவில் கமநல சேவைத்திணைக்களத்தின் பரிந்துரைக்கமைய இம்முறை இயந்திரம் மூலம் அறுவடை செய்யப்பட்டதாகவும் தெரிவித்த அவர் இதன் மூலமே அதிக இலாபம் கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.



# 2,250 மில்லிகிராம் ஹெரோயினுடன் 20 வயது இளைஞர் கைதுசெய்யப்பட்டார்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஓட்டமாவடி பிரதேச ஜும்ஆப் பள்ளிவாசல் உண்டியலை கடந்த இரு தினங்களுக்கு முன்னர் உடைத்து அதிலிருந்த பணத்தைத் திருடிய 20 வயதுடைய இளம் சந்தேக நபரொருவர் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு சமூகச் செயற்பாட்டாளர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் வாழைச்சேனைப் பொலிஸாரின் உதவியுடன் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து சுமார் 2,250 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், குறித்த சந்தேக நபர் பிறைத்துறைச் சேனையைச் சேர்ந்தவர் என்றும் ஏறாவூரில் திருமணம் முடித்துள்ளார் எனவும் முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு, பள்ளிவாசல் உண்டியலை உடைத்து திருடியது தொடர்பிலும் போதைப்பொருள் வைத்திருந்தமை தொடர்பிலும் வாழைச்சேனைப் பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதோடு, நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

# வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட ஆறு மாதக் குழந்தை உயிரிழப்பு

திருகோணமலை கப்பல் துறை பகுதியில் வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட மூவரில் 6 மாதக் குழந்தை நேற்றிரவு உயிரிழந்துள்ளதாக திருகோணமலை பொது வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கப்பல்துறை பகுதியில் குடும்பத்தகராறு காரணமாக மாமா, மாமி மற்றும் வாளால் வெட்டியவரின் 6 மாதக் குழந்தை ஆகியோர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் நேற்று பிற்பகல் 2.30 மணி அளவில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த சம்பவத்தில் வெட்டிய சந்தேக நபரின் மாமா, மாமி சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட இருந்த நிலையில் மாமியாரின் கை துண்டிக்கப்பட்ட நிலையில் சீனக்குடா பொலிஸார் துண்டிக்கப்பட்ட கையை திருகோணமலை பொது வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். எனினும், 43 வயதுடைய குறித்த பெண்ணுக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும் துண்டிக் கப்பட்ட கையை பொருத்த முடியாமல் போயுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை குறித்த சம்பவத்தில் 6 மாதக்குழந்தை வெட்டுக் காயங்களுக்கு உள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தது.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்துள்ளதாகவும் தெரியவருகின்றது. குறித்த ஆறு மாதக்குழந்தையின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை தேடி வருகிறோம் எனவும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம் எனவும் சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

# 8 கசிப்பு உற்பத்தி நிலையங்கள் பொலிஸாரால் சுற்றிவளைப்பு

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கையில் எட்டு கசிப்பு உற்பத்தி நிலையங்கள் சுற்றி வளைக்கப்பட்டுள்ளன.

நன்னி, கண்டல்காடு, மணல் ஆறு, சோள வெட்டுவான், தளவாய், படுகாடு, சாவாறு, கங்கை ஆற்றுப் பகுதிகளில் அமைந்துள்ள கசிப்பு உற்பத்தி நிலையங்களே இவ்வாறு நேற்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளன.

குறித்த கசிப்பு உற்பத்தி நிலையங்களில் 2,000 ரூபா நாள் கூலிக்கு பணியாளர்களை வேலைக்கமர்த்தி கசிப்பு உற்பத்தி முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கசிப்பு உற்பத்தி நிலையங்களில் கசிப்பு மற்றும் கோடாத் திரவமும் அடங்கிய 26 பரல்களில் சுமார் 3,000 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியா பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய இந்த 8 கசிப்பு உற்பத்தி நிலையங்களும் சுற்றி வளைக்கப்பட்டுள்ளன .

இதேவேளை கசிப்பு உற்பத்தி நிலையங்கள் வைத்திருந்தவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் எனவும் அவர்களை தேடும் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம் எனவும் கிண்ணியா பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு







## யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர்

# ஜேர்மனிக்கு முதல் வெற்றி; பிரான்ஸ் – ஹங்கேரி சமநிலையில்

யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் நகரில் நேற்று நடந்த 'எப்' பிரிவு லீக் ஆட்டம் ஒன்றில் உலக சம்பியனான பிரான்ஸ் அணி, ஹங்கேரியை எதிர்கொண்டது. நட்சத்திர வீரர்களை உள்ளடக்கிய பிரான்ஸ் அணிக்கு, உள்ளூர் ரசிகர்களின் ஆதரவுடன் களம் கண்ட ஹங்கேரி எல்லாவகையிலும் சவால் கொடுத்தது.

சில கோல் வாய்ப்புகள் பிரான்ஸுக்கு நழுவிப்போன நிலையில் 45 ஆவது நிமிடத்தில் ஹங்கேரி கோல் அடித்து அதிர்ச்சி அளித்தது. அந்த அணியின் அட்டிலா பியோலா, எதிரணியின் இரு பின்கள வீரர்களை ஏமாற்றி பந்தை கோலாக்கினார்.

பிற்பாதியில் பிரான்ஸ் வீரர்கள் மேலும் ஆக்ரோஷமாக ஆட, 66 ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் கோலை அடித்தது. கிரிஸ்மான் அந்த கோலை அடித்தார். முடிவில் இந்தப் போட்டி 1–1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. தனதுமுதல்போட்டியில்ஜேர்மனியைவென்றிருந்த பிரான்ஸ் தற்போது 4 புள்ளிகளுடன் உள்ளது.

மூனிச் நகரில் நடைபெற்ற 'எப்' பிரிவுப் போட்டியில் நடப்பு சம்பியனான போர்த்துக்கல் அணி, முன்னாள் உலகச் சம்பியன் ஜேர்மனியுடன் மோதியது. போட்டியின் 15 ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் கப்டன் ரொனால்டோ முதலாவது கோலை அடித்தார். சர்வதேசப் போட்டிகளில் அவரது 107 ஆவது கோல் இதுவாகும்.

போர்த்துக்கல் வீரர்கள் ருபென் டயாஸ் 35 ஆவது நிமிடத்திலும், ரபெல் குயரீரோ 39 ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து சேம் சைட் கோல்களை அடித்து அதிர்ச்சி அளித்தனர். ஜேர்மனியின் கோல் வாய்ப்புகளை கடைசி நேரத்தில் முறியடிக்க முற்பட்டபோது பந்து அவர்களது காலில் பட்டு வலைக்குள் புகுந்தது. யூரோ கால்பந்து வரலாற்றில் ஒரு ஆட்டத்தில் இரண்டு சேம் சைட் கோல் அடித்த ஒரே அணி போர்த்துக்கல்லானது.

முதல் பாதியில் 2–1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்த ஜேர்மனியின் இளம் வீரர் ஹவெர்ட்ஸ் 51 ஆவது நிமிடத்திலும், ராபின் கோசென்ஸ் 60 ஆவது நிமிடத்திலும் கோல் அடித்து போர்த்துக்கல்லை நிலைகுலைய வைத்தனர். இதன் பிறகு 67 ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் வீரர் டியாகோ கோல் ஒன்றை அடித்தாலும் அது தோல்வியின் வித்தியாசத்தை குறைக்க மட்டுமே உதவியது. முடிவில் ஜேர்மனி 4–2 என்ற கோல் கணக்கில் போர்ச்சுக்கலை வென்றது. தொடரில் தனது இரண்டாவது ஆட்டத்தில் ஆடிய ஜேர்மனிக்கு இது முதலாவது வெற்றியாகும். தனது முதல் போட்டியில் ஹங்கேரியைத் தோற்கடித்திருந்த போர்சுக்கலுக்கு இது முதலாவது தோல்வியாகும்.

## கோபா அமெரிக்கா கால்பந்தாட்டத் தொடர்

# ஆர்ஜென்டினா, சிலி அணிகள் வெற்றி

தென்னமெரிக்கக் கண்டத்தைச் சேர்ந்த அணிகளுக்கான 47 ஆவது கோபா அமெரிக்கா கால்பந்தாட்டப் போட்டித் தொடர் பிரேஸில் நாட்டில் நடந்துவருகிறது.

இந்தத் தொடரில் பிரேஸில் நேற்று முன்தினம் நடந்த 'ஏ' பிரிவு ஆட்டத்தில் முன் னாள் சம்பியன்களான ஆர்ஜென்டினாவும் உருகுவேயும் சந்தித்தன. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் ஆர்ஜென்டினா அணி 1–0 என்ற கோல் கணக்கில் உருகுவேயை வீழ்த்தியது. ஆர்ஜென்டினா வீரர் ரோட்ரிக்ஸ் 13 ஆவது நிமிடத்தில் கோலடித்தார். கடைசிவரை போராடியும் உருகுவே அணியால் கோலடிக்க முடியவில்லை. முதலாவது ஆட்டத்தில் சிலியுடன் சமநிலையில் போட்டியை முடிந்திருந்த ஆர்ஜென்டினா அணி பெற்ற முதல் வெற்றி இதுவாகும்.

இதே பிரிவில் நடந்த மற்றொரு லீக் ஆட்டத்தில் சிலி அணி 1–0 என்ற கோல் கணக்கில் பொலிவியாவை வீழ்த்தியது. வெற்றிக்கான கோலை சிலி அணி வீரர் பென் பிரெர்டன் 10 ஆவது நிமிடத்தில் அடித்தார். முதல் ஆட்டத்தில் சமநிலை முடிவைக் கண்டிருந்த சிலி அணிக்குக் கிடைத்த முதல் வெற்றி இதுவாகும். பொலிவியாவுக்கு இது இரண்டாவது தோல்வியாகும்.





# இந்திய டெஸ்ட் அணித்தலைவராக விராட் கோலி சாதனை



இந்திய அணியின் கப்டனாக அதிக டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய சாதனை விராட் கோலி வசமாகியுள்ளது.

எம்.எஸ்.டோனியுடன் சமநிலையில் இருந்த அவர், நேற்று நியூசிலாந்துக்கு எதிராக உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் களமிறங்கியதன் மூலமாக முதலிடத்துக்கு முன்னேறினார். இது தலைவராக அவர் விளையாடும் 61 ஆவது போட்டியாகும்.

சர்வதேச அளவில் தென்னாபிரிக்காவின் கிரேம் ஸ்மித் – 109 டெஸ்ட்களுடனும், ஆஸ்திரேலியாவின் அலன் போடர் – 93 டெஸ்ட்களுடனும் முதல் இரு இடங்களில் உள்ளனர்.

# இங்கிலாந்து - இந்திய மகளிர் டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவு



இந்தியா – இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி எந்தவொரு அணிக்கும் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்துள்ளது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து தனது முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 396 ஓட்டங்களை எடுத்த நிலையில் தனது இன்னிங்ஸை இடைநிறுத்திக்கொண்டது. ஹீதர் நைட் 95, சோபியா 74, பியுமொன்ட் 66 ஓட்டங்களைப் பெற்றனர். இந்திய அணியின் அறிமுக வீராங்கனைகளான ரானா 4, தீப்தி சர்மா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

அடுத்து தனது இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா, தனது முதல் இன்னிங்ஸில் 231 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இந்திய அணியில் டெஸ்ட் அறிமுகத்தை மேற்கொண்ட 17 வயது வீராங்கனை சஃபாலி வாமா 13 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 96 ரன்கள் சேர்த்த நிலையில் சதத்தைத் தவறவிட்டு ஆட்டமிழந்தார். ஸ்மிருதி மந்தனா 78 ஓட்டங்களை எடுத்தார். இங்கிலாந்து அணியின் சோஃபி எக்லெஸ்டோன் 4, ஹீதா நைட் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

165 ஓட்டங்கள் பின்னிலையிலிருந்த இந்திய அணியை பொஃலோ ஒன் அடிப்படையில் மீண்டும் துடுப்பெடுத்தாடப் பணித்தது இங்கிலாந்து. அதையடுத்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய மகளிர் அணி நேற்றைய நான்காவதும் இறுதியுமான நாளின் ஆட்டம் நிறைவுபெற்றபோது 8 விக்கெட்டுக்களை இழந்து 344 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. முதல் இன்னிங்ஸைப்போலவே அபாரமாகத் துடுப்பெடுத்தாடிய சஃபாலி வாமா 63 ஓட்டங்களை எடுக்க, மற்றுமொரு அறிமுக வீராங்கனையான தீப்தி சர்மா 54, ரானா ஆட்டமிழக்காது 80 ஓட்டங்களைப் பெற்றனர். இங்கிலாந்தின் சோஃபி எக்லெஸ்டோன் 4, நற்ஸ்கைவர் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரர் விருது இந்தியாவின் அறிமுகவீராங்கனையான சஃபாலி வாமாவுக்கு வழங்கப்பட்டது. இந்த இரு அணிகளுக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் தொடர் 27 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.


திருமண தேடலை இலகுவாக்கும் ஒரு முயற்சி
ஆயிரக்ககணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு அரச தனியார்
தொழில்புரியும் மணமக்களிலிருந்து உங்களுக்கு
பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்.
அருந்ததி
இணைய திருமண சேவை
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி, கொக்குவில்
www.arunthathee.com | +94 777 164 524

# 9 மாவட்டப் பொது வைத்தியசாலைகளை மத்தி எடுப்பது அரசமைப்பை மீறும் செயல்

## வடமாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் காட்டம்



மாவட்ட பொது வைத்தியசாலைகளை மத்திய சுகாதார அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர எடுக்கப்படும் நடவடிகை இலங்கை ஜனநாயக சோசலிசக்குடியரசின் அரசமைப்பை அப்பட்டமாக மீறும் செயல்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் வைத்தியர் ப.சத்தியலிங்கம்.

இந்த விடயம் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு வழங்கிய அறிக்கை வருமாறு–

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளென அரசாங்க தகவல் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் ஒன்பது மாவட்ட பொது வைத்தியசாலைகள் மாகாண சபை நிர்வாகத்திடம் இருந்து பலாத்காரமாக பறிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கை இலங்கையினுடைய அரசமைப்பை அப்பட்டமாக மீறும் செயலாகும். இம்மீறலுக்கு அரசாங்கம் ஏற்க முடியாத நகைப்பிற்கிடமான காரணத்தைக் கூறியுள்ளது. அதாவது மாவட்டம்தோறும் ஒவ்வொரு வைத்தியசாலைகளை தெரிவு செய்து மத்தியின் நிர்வாகத்தின்கீழ் கொண்டு வருவதனூடாக தேசிய வைத்தியசாலைகளில் காணப்படும் மருத்துவ வசதிகளை ஏற்படுத்தலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறாயின் பலவருடங்களின்முன் மத்திய சுகாதார அமைச்சின் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட திருகோணமலை மாவட்ட பொதுவைத்தியசாலையின் தரத்தை அவர்களால் ஒரு தேசிய வைத்தியசாலையின் தரத்துக்கு கொண்டுவர முடிந்ததா? இல்லை என்பதே உண்மை.

எனவேபொய்யானகாரணங்களைக் கூறி மாகாணங்களுக்கு பகிர்ந்த அதிகாரங்களைப் பறிப்பதே அவர்களது நோக்கமாக உள்ளது. யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலை அரசமைப்பு ரீதியாக தொடர்ச்சியாக மத்திய அரசின் நிர்வாகத்திலேயே உள்ளது, இவர்கள் கூறுவதைப்போல தெற்கில் உள்ள போதனா வைத்தியசாலையில் உள்ள வசதிகளை இவர்களால் இதுவரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு ஏற்படுத்திக்கொடுக்க முடிந்ததா என்றால் அதற்கும் இல்லை என்பதே பதிலாக உள்ளது.

எனவே, மாகாண வைத்தியசாலைகளைத் தம்வசப்படுத்த அவர்கள் பொய்யான காரணங்களை கூறுகின்றமையை உறுதிப்படுத்துகிறது.

மாகாண வைத்தியசாலைகளை இதயசுத்தியோடு பலப்படுத்த அவர்கள் விரும்பினால் இப்போது உள்ள சட்ட ஏற்பாடுகளினூடாக அவற்றை மாகாண வைத்தியசாலைகளாக வைத்துக் கொண்டே செய்யலாம்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின்அரசமைப்பின்பதின்மூன்றாவது திருத்தத்தின் ஒன்பதாம் அட்டவணை நிரல்–1 இன் 11.1 இன் பிரகாரம் போதனாவைத்தியசாலைகள் மற்றும் விசேட நோக்கங்களுக்காக ஸ்தாபிக்கப்பட்ட வைத்தியசாலைகள் தவிர்ந்த பொது வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய அனைத்து வைத்தியசாலைகளும் மாகாணசபைகளின் ஆளுகைக்குட்பட்டவை.

அதனடிப்படையில் வடக்கு மாகாணத்தின்முதலாவதுமாகாணசபையால் 12.01.2016 அன்று அங்கீகரிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சுகாதார சேவைகள் நியதிச் சட்டத்தின் அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டவாறு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய அனைத்து வைத்தியசாலைகளும் மாகாண சுகாதார அமைச்சிற்கு உட்பட்டவை என 2016.02.23 ஆம் திகதிய அதிவிசேட அரச வர்த்தமானியூடாக பிரகடனப்படுத்தப்பட் டுள்ளது.

எனவே மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாணசபைகள் எவையுமே இல்லாத நிலையில் அரசமைப்பின் 13 ஆம் திருத்தச்சட்டத்தினூடாக மாகாண சபைகளுக்கு பகிரப்பட்ட அதிகாரங்களை மீண்டும் பறித்தெடுப்பதென்பது முற்றிலும் சட்டவிரோதமானது. இவ்வாறே ராஜபக்ஷாக்களின் ஆட்சிக் காலத்தில் 'திவிநெகும' சட்டமூலமூடாக மாகாண விவசாய அமைச்சிற்கு பகிரப்பட்ட அதிகாரங்களை பறித்ததும் தற்போதைய ஆட்சியாளர்கள் ஆயிரம் தேசியப்பாடசாலைகளை உருவாக்குதல் எனும் நிகழ்ச்சித்திட்டத்தினூடாக மாகாணங்களுக்கு பகிரப்பட்ட அதிகாரங்களை பறிக்க முற்பட்டிருப்பதும்

புதிய அரசமைப்பொன்றை உருவாக்குவதனூடாக அதிகாரங்களை பகிர்ந்து இந்நாட்டில் வாழும் அனைத்து இனமக்களும் சமாதானமாக வாழலாம் என்ற கருத்தியலுக்கு தற்போதைய அரசு முரணாக செயற்படுகிறது என்பதற்கு சான்று என்பது திண்ணம்.– என்றுள்ளது.

## பயணக்கட்டுப்பாடுகள் நாளை நீக்கம் மக்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறை

நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகள் நாளை (திங்கட்கிழமை) நீக்கப்படவுள்ளன.

இந்த நிலையில், சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்படவுள்ளன என பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரி வித்துள்ளார்.



அத்தோடு, குறித்த கட்டுப்பாடுகளுக்கு உட் பட்டே மக்கள் செயற்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். அலுவலகங்களில் சேவைக்காக குறைந்த பட்ச ஊழியர்களையே வரவழைக்க முடியும்.

வீட்டிலிருந்து வேலை செய்யக்கூடியவர்களை அவ்வாறே சேவையில் ஈடுபடுத்த வேண்டும்.

பொது போக்குவரத்தில் பயணிகளை இருக்கைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அழைத்துச் செல்ல வேண்டும். ஒவ்வொரு நபரும் முகக்கவசம் அணிவது கட்டாயமாகும்.

தனிமைப்படுத்தல் சட்டங்களை உரிய முறையில் பின்பற்ற வேண்டும். மாகாணங்களுக்கு இடையேயானபயணக்கட்டுப்பாடுகள் நீக்கப்படமாட்டா. ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக மட்டுமே மாகாணங்களுக்கு இடையே பயணிக்க முடியும்.

உல்லாசப் பயணங்கள் மற்றும் யாத்திரை செல்ல அனுமதி இல்லை. பொது இடங்களில் கூட்டமாக இருக்கக்கூடாது.

## தனிமைப்படுத்தல் மீறல் ஆயிரத்து 82 பேர் கைது

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் ஆயிரத்து 82 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலையுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்தில் மாத்திரம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சரியான முறையில் முகக்கவசம் அணியாமை, மாகாண எல்லைகளைக் கடந்தமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்

## நாளை முதல் மீண்டும் போக்குவரத்து சேவை

நாளை (திங்கட்கிழமை) போக்குவரத்துகட்டுப்பாடுகள்நீக்கப்பட்டவுடன் பொதுப்போக்குவரத்து சேவைகள் மீண்டும் ஆரம்பமாகும் என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நாளை (திங்கட்கிழமை) காலை நான்கு மணிமுதல் புதன்கிழமை இரவு பத்துமணிவரை மாகாணங்களுக்குள் பஸ்களையும் ரயில்களையும் இயக்க தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் 17 ரயில்கள் சேவையில் ஈடுபடுவதோடு தனியார் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களும் சேவையில் ஈடுபடும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## கோழி இறைச்சி விலை அதிகரிக்கப்படலாம்

கோழி இறைச்சியின் விலையை அதிகரிக்க அனுமதி வழங்குமாறு கோழி இறைச்சி உற்பத்தியாளர்கள் சங்கம், நுகர்வோர் அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கோழி இறைச்சி உற்பத்திக்கான செலவுகள் அதிகரித்துள்ளதன் காரணமாக தற்போதைய விலையில் கோழி இறைச்சியை விற்பனை செய்ய முடியாது என உற்பத்தியாளர்கள் கூறியுள்ளனர்.

50 ரூபா விலைக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் சோளம் தற்போது, 90 முதல் 95 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதன் காரணமாக 430 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியை 550 ரூபாவுக்கு விற்பனை செய்ய அனுமதி வழங்குமாறு கோழி இறைச்சி உற்பத்தியாளர்கள் சங்கம், நுகர்வோர் அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## மருத்துவப் பரிசோதனைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டார் ரஞ்சன்

அங்குகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, சிறைச்சாலைஅதிகாரிகளால், நேற்று சனிக்கிழமை காலை காலி கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

மருத்துவப் பரிசோதனைக்காகஅவர்வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் எனத் தெரிய வருகிறது.




சிறைச்சாலை பஸ்ஸில், கடுமையான பாதுகாப்புக்கு மத்தியில் ரஞ்சன் அழைத்துச் செல்லப்பட்டமையுடன் கராப்பிட்டிய வைத்தியசாலை சூழலிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்ட ரஞ்சன், தற்போது நான்கு ஆண்டு சிறைத்தண்டனையின் கீழ் அங்குகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில்தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt.Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.06.2021 இல் வெளியிடப்பெற்றது.